

தனி பிரதி
ரூ.10/-

Single Copy
Rs.10/-

ANNUAL SUBSCRIPTION
Rs.120/-



# பொறியியல் கதிர்
# PORIYIYAL KADHIR


TAMIL & ENGLISH MONTHLY

| கதிர் 54 | பாரிப்பு 6 | திருவள்ளுவர் ஆண்டு 2053 | பிப்ரவரி 2023 |
|---|---|---|---|
| KADHIR 54 | PAARIPPU 6 | THIRUVALLUVAR AANDU 2053 | FEBRUARY 2023 |


## மாநில செயற்குழுக் கூட்டம்





நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

# மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்

















## பொதுச் செயலாளர் மடல்

மடல் - 6 (2022 - 2023)



# தொடரும்

# நம் பயணம் .......

### அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நீதிமன்ற தடையாணையை நீக்கினால்தான் மீதமுள்ள ஊட்டுப் பதவியிலிருந்து வந்த உதவிப் பொறியாளர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு பெற முடியும். வழக்கு விசாரணைக்கு வருவது தள்ளி போகிறது. இந்த நீதிமன்ற தடையாணையை நீக்க முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

உதவிப் பொறியாளர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்காமல் இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க முடியாது என்று அரசு தரப்பில் சொல்லப்படுகிறது. எனவே உதவிப் பொறியாளர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்காமல் இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க முடியாத சூழ்நிலை உள்ளது.

சட்டத்திற்கும், விதிகளுக்கும் புறம்பாக இளநிலைப் பொறியாளர் காலிப்பணியிடங்களில் உதவிப் பொறியாளர்களை நியமிக்க முதன்மை தலைமைப் பொறியாளர்கள் எடுத்து வரும் நடவடிக்கைகளை தடுக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

# 29.01.2023 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் 29.01.2023 ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணி அளவில் சென்னை பொறியியல் இல்லத்தில் மாநிலத் தலைவர் பொறியாளர் S.பாஸ்கரன் அவர்கள் தலைமையில், மாநில பொதுச் செயலாளர் D. முருகேசன் அவர்கள் முன்னிலையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே ஆரம்பமானது.

அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் N. முருகேசன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார். சென்னை கிளையின் சார்பாக கிளைத் தலைவர் பொறியாளர் S.பார்த்தசாரதி அவர்களும், மையச் சங்கம் சார்பாக அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் N. முருகேசன் அவர்களும் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

நமது சங்கத்தைச் சார்ந்த பொறியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் குடும்பத்தில் மறைந்தவர்களுக்காக இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் பொறியாளர் S.பாஸ்கரன் அவர்கள் தன்னுடைய உரையில் சங்க செயல்பாடுகள் குறித்து பேசினார். மாநில துணைத் தலைவர் பொறியாளர் C.பன்னீர்செல்வம் அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி உரையாற்றினார்.

கூட்டத்திற்கு வந்திருந்த மையச் சங்க பொறுப்பாளர்களுக்கும் சிறப்பு அழைப்பாளர்களுக்கும் மையச்சங்கத்தின் சார்பாக பொன்னாடைகள் அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்தின் (AIFODE) தென் மண்டல செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாநிலத்தலைவர் பொறியாளர் எஸ்.பாஸ்கரன் அவர்களுக்கு பொதுச்செயலாளர் த.முருகேசன் அவர்கள் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் D.முருகேசன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து மிக விரிவாக எடுத்துரைத்தார்.

உறுப்பினர் கருத்துக்கள் பகுதியில் பொறியாளர் P.முத்துசாமி செயலாளர் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை, பொறியாளர் V.சிவப்பிரகாசம் பொருளாளர் தஞ்சாவூர் கிளை, பொறியாளர் J.ஸ்ரீனிவாசன் பொருளாளர் மதுரை கிளை, பொறியாளர் R.வேதமூர்த்தி தலைவர் திருவாரூர் - நாகை கிளை, பொறியாளர் V.இரவிச்சந்திரன் செயலாளர் மதுரை கிளை, பொறியாளர் V.சரவணக்குமார் செயலாளர் திண்டுக்கல் கிளை, பொறியாளர் G.அண்ணாமலை செயலாளர் புதுக்கோட்டை கிளை, பொறியாளர் R.அழகர்சாமி செயலாளர் விருதுநகர் கிளை, பொறியாளர் G.விஜயசேகர் செயலாளர் கோவை - பொள்ளாச்சி கிளை, பொறியாளர் K.R.ஜெயராமன் செயலாளர் திருச்சி கிளை, பொறியாளர் R.வெங்கடேசபாபு செயலாளர் வேலூர் கிளை, மூத்தப் பொறியாளர்கள் M.பலராமன், T.P.பாலசுப்ரமணியன் ஆகியோர் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பொதுச்செயலாளர் விரிவான விளக்கம் அளித்தார்.

DECT, REAT சேலம் கிளைத்தலைவரும் மூத்த பொறியாளருமான ம.பலராமன் அவர்களின் 85 வது பிறந்தநாளை முன்னிட்டு பொதுச்செயலாளர் த.முருகேசன் அவர்கள் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

அதை தொடர்ந்து மண்டல செயலாளர்கள் பொறியாளர்கள் R.தயாளகுமார் கிழக்கு மண்டல செயலாளர், C. பன்னீர்செல்வம் மாநில துணைத்தலைவர் மேற்கு மண்டல செயலாளர் சார்பில், M.ரவி தெற்கு மண்டல செயலாளர், A.திருவேங்கடமூர்த்தி மைய மண்டல செயலாளர் ஆகியோர் கிளைச்சங்க செயல்பாடுகள் குறித்து உரையாற்றினார்கள்.

சென்னை மற்றும் கோவை பொறியியல் இல்லம் பராமரிப்பு குறித்து பொதுச்செயலாளர் D.முருகேசன் அவர்கள் உரையாற்றினார்.

சென்னை கிளையின் சார்பாக கிளைத்தலைவர் பொறியாளர் S. பார்த்தசாரதி அவர்களும் மையச்சங்கத்தின் சார்பாக அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர் N.முருகேசன் அவர்களும் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

மையச் செயற்குழு கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறையில் நீண்ட நாட்களாக காலியாக உள்ள இளநிலைப்பொறியாளர் பதவிகளை தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் உடனடியாக நிரப்ப வேண்டும் என்று இம்மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

2. சட்டத்திற்கும், விதிகளுக்கும் புறம்பாக இளநிலைப் பொறியாளர் காலிப் பணியிடங்களை உதவிப்பொறியாளர்களைக் கொண்டு நிரப்பக் கூடாது என்று தமிழக அரசை கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

3. நீர்வளத்துறை மற்றும் பொதுப் பணித்துறையில் 3:1 விகிதாச்சார மாறுபாட்டை (Ratio Imbalance) தவிர்க்க இளநிலைப் பொறியாளர்களை தேர்வு செய்யாமல் உதவிப்பொறியாளர்களை தேர்வு செய்யக் கூடாது என்று இம்மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

4. பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறையில் பிரிவு அலுவலகங்கள் உதவிப்பொறியாளர் பிரிவு / இளநிலைப் பொறியாளர் பிரிவு என தனித்தனியாக பிரிக்கக்கூடாது என இம்மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

5. துறையில் காலியாக உள்ள தொழில்நுட்ப உதவியாளர் (Technical Assistant) பதவிகளை நிரப்ப இம்மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

6. துறையில் காலியாக உள்ள பாசன ஆய்வாளர் (Irrigation Gumastha) பதவிகளை நிரப்ப இம்மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

7. தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு சொந்தமான கட்டிடங்கள் சென்னை சுண்ணாம்பு கொளத்தூரில் உள்ள சங்கத்திற்கு சொந்தமான இடம் போன்றவற்றை பாதுகாக்க சொத்து பாதுகாப்புக்குழு அமைப்பது என தீர்மானிக்கப்படுகிறது. இதில் மையச்சங்க பொறுப்பாளர்கள், ஒவ்வொரு கிளைக்கும் ஒரு பொறுப்பாளர் மற்றும் சில மூத்த பொறியாளர்கள் இருப்பார்கள் என தீர்மானிக்கப்படுகிறது.

# மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்














## மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்























மாநில செயற்குழுக்கூட்டத்தில் 85 வது பிறந்தநாளை முன்னிட்டு DECT,REAT சேலம் கிளைத்தலைவரும் மூத்த பொறியாளருமான ம.பலராமன் அவர்களுக்கு பொதுச்செயலாளர் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.





Government of Tamil Nadu
2023

MANUSCRIPT SERIES

**FINANCE (Allowance) DEPARTMENT**
**G.O.Ms.No.15, Dated 18th January, 2023.**
(Subakiruthu, Thai-4, Thiruvalluvar Aandu 2054)

**ABSTRACT**

General Provident Fund - Ceiling of Rupees 5 Lakh on Subscription to General Provident Fund account in a financial year - Orders - Issued.

**Read the following:-**

1. G.O.(Ms). No.461, Finance (Allowance) Department, dated: 22.09.2009.
2. Government of India, Ministry of Personnel, PG & Pensions Department of Pension & Pensioner's Welfare, New Delhi, OM.F.No.3/13/2022-P&W (F) (8353), dated: 02.11.2022.
3. Letter received from the Principal Accountant General (A&E), D.O.Lr.No.PAG (A&E)/FM I/I/2022-23 / 151-40445, Dated 30.11.2022.

**ORDER:**

In the Government order first read above, orders were issued capping the monthly Subscription of General Provident Fund @ 12% of the emoluments i.e. Basic Pay + GP + SP + PP + DA with effect from 01.01.2009.

2. Government of India in the Office Memorandum second read above, issued instructions consequent to the maximum annual General Provident Fund Subscription limit Rs.5,00,000/- (Rupees Five Lakh only) being exceeded during current financial year in certain cases. Therefore, Government of India has instructed that further where General Provident Fund Subscription during the current financial year has already exceeded the threshold limit of Rs.5 lakh, no further deduction may be made and minimum monthly subscription of 6% of emoluments shall be deemed to have been relaxed. In case, where General Provident Fund subscription during the current financial year has not yet reached / exceeded the threshold limit of Rs.5 lakh, further deductions towards General Provident Fund subscription during the current financial year may be phased out such that the total subscription during the current financial year does not exceed Rs.5 lakh. In case where the total contribution is likely to exceed Rs. 5 lakh even with minimum monthly subscription of 6% of emoluments, deduction of General Provident Fund may be stopped and the minimum monthly subscription of 6% of the emoluments shall be deemed to have been relaxed.

3. The Principal Accountant General (A&E) in the letter third read above has requested to indicate whether any action has been taken to extend the amendments

carried out by Government of India to various provident fund accounts pertaining to Government of Tamil Nadu.

4. The Government has carefully examined the above instructions and decided to limit the maximum annual General Provident Fund Subscription at Rs.5 lakh to the various Provident Fund accounts of employees of Government of Tamil Nadu from the financial year 2022-2023.

5. The threshold limit of Rs. 5 lakh being effected at the fag end of the present financial year, the subscription by a subscriber under General Provident Fund (Tamil Nadu) shall be regulated as follows:-

(a) In case of those Government servants, whose General Provident Fund subscription during the current financial year (i.e.2022-2023) has already exceeded the threshold limit of Rs.5 lakh, no further deductions of General Provident Fund subscription may be made from their salary in the current financial year. In those cases, the provision regarding minimum monthly subscription of 12% of the emoluments shall be deemed to have been relaxed.

(b) In case of those Government servants, whose General Provident Fund subscription during the current financial year (i.e.2022-2023) has not reached / exceeded the threshold limit of Rs.5 lakh, further deductions towards General Provident Fund subscription during the current financial year may be phased out in such a manner that the total subscription during the current financial year does not exceed Rs.5 lakh. In cases where the total contribution is likely to exceed Rs. 5 lakh even with minimum monthly subscription of 12% of the emoluments, deduction of General Provident Fund subscription from the salary may be stopped as soon as the total contribution in the current financial year reaches Rs.5 lakh. In such cases also, the provision regarding minimum monthly subscription of 12% of the emoluments shall be deemed to have been relaxed.

6. Necessary amendment to the General Provident Fund (Tamil Nadu) rules shall be issued separately.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**N. MURUGANANDAM**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 9 பொதுப்பணித் (பணி 1-2)த் துறை நாள் 31.01.2023)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | B. இராஜேந்திரன் | உதவி செயற்பொறியாளர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (மு.கூ.பொ)

## FINANCE [Allowances] DEPARTMENT

**G.O.Ms.No.21, Dated 23rd January, 2023.**

(Subakiruthu, Thai-9, Thiruvalluvar Aandu 2054)

**ABSTRACT**

**Provident Fund** - General Provident Fund (Tamil Nadu) – Rate of interest for the financial year 2022-2023 with effect from 01.01.2023 to 31.03.2023 - Orders – Issued.

**Read the following:-**

1. G.O.Ms.No.109, Finance (Allowances) Department, dated 19.04.2022.
2. G.O.Ms.No.227, Finance (Allowances) Department, dated 26.07.2022.
3. G.O.Ms.No.335, Finance (Allowances) Department, dated 22.10.2022.
4. From the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs (Budget Division), New Delhi, Resolution No.F.No.5(4)-B(PD)/2021, dated:03.01.2023.

**ORDER:**

In the Government Order first, second and third read above, orders were issued fixing the rate of interest on the accumulation at the credit of the subscribers of G.P.F (TN) during the financial year 2022 – 2023 as detailed below:

| Sl. No. | Quarter | Period | Rate of Interest |
|---|---|---|---|
| 1. | I | 01-04-2022 to 30-06-2022 | 7.1% |
| 2. | II | 01-07-2022 to 30-09-2022 | 7.1% |
| 3. | III | 01-10-2022 to 31-12-2022 | 7.1% |

2. The Government of India, in its resolution fourth read above, announced that during the financial year 2022-2023, accumulations at the credit of subscribers to the General Provident Fund and other similar funds shall carry interest at the rate of 7.1% (Seven point one percent) with effect from 1st January -2023 to 31st March -2023(Q4).

3. The Government now direct that the rate of interest on the accumulation at the credit of the subscribers to General Provident Fund (Tamil Nadu) shall carry interest at the rate of 7.1% (Seven point one percent) with effect from 1st January -2023 to 31st March -2023(Q4).

4. The rate of interest on belated final payment of Provident Fund accumulation remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rates as ordered in para-3 above.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**N. MURUGANANDAM**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT.**

நிதி(ஓய்வூதியம்)த் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை - 9.

**கடித எண்.30948/ஓய்வூதியம்/2022-2, நாள்: 07.10.2022.**

**அனுப்புநர்**

திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், இ.ஆ.ப.,
அரசு சிறப்பு செயலாளர்

**பெறுநர்**

அனைத்து அரசு கூடுதல் செயலாளர்கள் /
முதன்மைச் செயலாளர்கள் / செயலாளர்கள், சென்னை - 9.
தலைமைச்செயலக அனைத்துத் துறைகள், சென்னை-9.
அனைத்துத் துறை தலைமைகள்.

ஐயா,

**பொருள்:** தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் குடும்ப பாதுகாப்பு நிதித்திட்டம் - நியமனதாரரை நியமனம் செய்வது - தெளிவுரைகள் - தொடர்பாக.

**பார்வை:** 1. அரசாணை நிலை எண்.762, நிதி (ஓய்வூதியம்)த் துறை நாள்: 31.12.1996.
2. அரசாணை நிலை எண்.416, நிதி (ஓய்வூதியம்)த் துறை நாள்:18.11.2010.
3. அரசுக் கடித எண்.30948, நிதி (ஓய்வூதியம்)த் துறை/2022, நாள்:30-08.2022.

பார்வையில் காணும் கடிதங்களின் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. பார்வை ஒன்று மற்றும் இரண்டில் காணும் அரசாணைகளின்படி தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் ஓய்வூதியதாரரின் விருப்பத்தின் பேரில், அவரின் ஓய்வூதியத்திலிருந்து சந்தாத் தொகை பிடித்தம் செய்யப்பட்டு, ஓய்வூதியர் இறக்கும் நேர்வில் அவர்தம் துணைவருக்கோ அல்லது அவரது துணைவர் உயிரோடு இல்லாத போது ஓய்வூதியர் நியமனம் செய்த நியமனதாரருக்கோ இத்திட்டத்தின் கீழ் ஒட்டுமொத்த தொகையானது வழங்கப்படும். மேலும், துணைவர் உயிரோடு இல்லாமலிருந்தாலோ அல்லது நியமனதாரர் எவரும் நியமிக்கப்படாத நிலையில், ஒட்டுமொத்த தொகையானது மறைந்த ஓய்வூதியரின் வாரிசுதாரர்களுக்கு சமமாக பிரித்து வழங்கப்படும்.

3. ஏற்கனவே பல்வேறு ஓய்வூதியதாரர்களின் சங்கங்கள் மற்றும் ஓய்வூதியர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் ஓய்வூதியர் இறந்த பின்பு வழங்கப்பட வேண்டிய ஒட்டுமொத்தத் தொகையினை பெறுவதற்குரிய நியமனதாரரை, ஓய்வூதியரோ அல்லது அவரது துணைவரோ இருவரும் உயிரோடு இருக்கும் போதே நியமனம் செய்து கொள்ளலாம் என பார்வை மூன்றில் காணும் அரசுக் கடிதத்தின் வாயிலாக தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

4. மேற்காணும் தெளிவுரையின் படி உரிய வழிமுறைகளின் வாயிலாக தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள், குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்திற்கான நியமனதாரரை ஓய்வூதியரோ அல்லது அவரது துணைவரோ இருவரும் உயிரோடு இருக்கும் போதே நியமனம் செய்து கொள்ளலாம் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள
ஒம்/-
அரசு சிறப்பு செயலாளருக்காக

**FINANCE (Salaries) DEPARTMENT**
**G.O.Ms.367, Dated, 5 December 2022.**
(சுபகிருது, கார்த்திகை - 19 திருவள்ளுவர் ஆண்டு - 2053)

**ABSTRACT**

**RULES** - The Tamil Nadu Transparency in Tenders Rules, 2000 - Amendment - Orders - Issued.

**ORDER:-**

The following Notification will be published in the **Tamil Nadu Government Gazette, Extraordinary,** dated the 5th day of December 2022.

**NOTIFICATION**

In exercise of the powers conferred by sub-section (1) of section 22 of the Tamil Nadu Transparency in Tenders Act, 1998 (Tamil Nadu Act 43 of 1998), the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Tamil Nadu Transparency in Tenders Rules, 2000.

2. The amendments hereby made shall come into force on the 5th day of December 2022.

**AMENDMENTS.**

In the said Rules,

(1) in rule 2, after clause (i), the following clause shall be inserted, namely:-

"(ii) "Start up" means any commercial entity, incorporated as a private limited company under the Companies Act, 2013 (Central Act 18 of 2013) or registered as a firm or as a limited liability partnership under the Indian Partnership Act, 1932 (Central Act IX of 1932) or the Limited Liability Partnership Act, 2008 (Central Act 6 of 2009), respectively, in this State and a period of seven years has not lapsed since the date of its incorporation or registration, as the case any be, and its turnover has not exceeded rupees twenty five crore in any financial year:

Provided that in bio-technology, artificial intelligence or machine learning sectors a period of ten years has not lapsed:

Provided further that no such entity has been formed by splitting up or by reconstruction of an existing commercial entity.".

(2) for rule 33, the following rule shall be substituted, namely:

"33."Low Value Procurement". For the purpose of clause (d) of section 16 of the Act, "Low Value Procurement" means any procurement, which is less than rupees fifty lakh in value for construction, which is less than rupees twenty lakh in value for vehicles and which is less than rupees twenty five lakh in value for all other categories of procurement inclusive of consultancies for construction or procurement from any Startup located in this State, of the goods manufactured by it, not exceeding rupees fifty lakh in value.".

**(BY ORDER OF THE GOVERNOR)**

**N.MURUGANANDAM**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

**FINANCE (Pension) DEPARTMENT**

**G.O.Ms.No.11, Dated 6th January 2023.**

(Subakiruthu, Margazhi-22, Thiruvalluvar Aandu 2053)

**ABSTRACT**

**PENSION** - Dearness Allowance to the Ex-gratia beneficiaries - Sanction - Enhanced rate admissible from **1st January 2023** - Orders - Issued.

**Read the following:-**

1. G.O.Ms.No.258, Finance (Pension) Department, dated: 18.08.2022.
2. G.O.Ms.No.10, Finance (Pension) Department, dated: 06.01.2023.

**ORDER:**

In the Government Order first read above, orders were issued sanctioning the enhanced rate of Dearness Allowance @ 373% with effect from 1st July, 2022 to the widows and dependent children of the deceased Contributory Provident Fund / Non-Pensionable Establishment beneficiaries of State Government and the former District Board employees who are in receipt of Ex-gratia payment of Rs.605/- p.m. and revised to Rs.645/- p.m. with effect from 4th June 2013.

2. In the Government Order second read above, orders were issued revising the rates of Dearness Allowance payable to the State Government Pensioners / Family Pensioners from 34 per cent to 38 per cent with effect from 1st January 2023 and it was ordered among others, that the Dearness Allowance to the widows and dependent children of the deceased Contributory Provident Fund / Non-Pensionable Establishment beneficiaries of State Government and the former District Board employees who are in receipt of Ex-gratia payment will be sanctioned separately.

3. Following the orders issued in the reference second read above, the Government sanction the revised rate of Dearness Allowance to the widows and dependent children of the deceased Contributory Provident Fund / Non-Pensionable Establishment beneficiaries of State Government and the former District Board beneficiaries who are in receipt of Ex-gratia payment of Rs.645/- p.m. as indicated below:-

| Date from Which payable | Revised rate of Dearness Allowance (per month) |
|---|---|
| 1st January, 2023 | 388% |

4. The Government also direct that the Dearness Allowance at the rate ordered in para-3 above shall be paid with effect from **1st January, 2023** to the widows and dependent children of the deceased Contributory Provident Fund / Non-Pensionable Establishment beneficiaries of State Government and the former District Board beneficiaries who are in receipt of Ex-gratia payment of Rs.645/- p.m.

5. The expenditure on Dearness Allowance payable to those who are in receipt of Ex-gratia payment of Rs.645/- p.m. shall be debited to the following Head of Account:

"2071. Pension and Other Retirement Benefits - 01. Civil - 800. Other Expenditure - State's Expenditure - AH. Ex-gratia payment to families of deceased - Non-Provincialised Employees - Contributory Provident Fund - 327. Pension - 09. Others.

**IFHRMS (D.P.C 2071 01 800 AH 32709)"**

6. Pending formal authorization by the Principal Accountant General, the revised Dearness Allowance shall be paid straightaway by the Pension Pay Officer, Chennai-35 and Treasury Officers / Sub-Treasury Officers concerned.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**N.MURUGANANDAM**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருநெல்வேலி - தூத்துக்குடி உறுப்பினர் பொறியாளர் S.கதிரவன், செயற்பொறியாளர் அவர்கள் பதவி உயர்வு பெற்றமைக்காக ரூ.5,000/- (ஐயாயிரம் மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மேற்கு மண்டல செயலாளர் பொறியாளர் T.ரவிச்சந்திரன், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பதவி உயர்வு பெற்றமைக்காக ரூ.5,000/- (ஐயாயிரம் மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், ஈரோடு கிளையின் துணைத்தலைவர் பொறியாளர் M.ரவிச் சந்திரன், இளநிலைப்பொறியாளர் அவர்கள் தனது மகள் திருமணத்தை முன்னிட்டு ரூ.5,000/- (ஐயாயிரம் மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தருமபுரி கிளை உறுப்பினர் பொறியாளர் R.K.சண்முகா, உதவிசெயற்பொறியாளர் அவர்கள் தனது மகன் திருமணத்தை முன்னிட்டு ரூ.2,000/- (இரண்டாயிரம் மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருநெல்வேலி - தூத்துக்குடி உறுப்பினர் பொறியாளர் B.பகவதி, உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1800/- (ஆயிரத்து எண்ணூறு மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

## நன்கொடை

உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்றமைக்காக நன்கொடை அளித்த திண்டுக்கல் கிளை உறுப்பினர்கள்

1. பொறி. V. சரவணக்குமார், உதவிசெயற்பொறியாளர் - 5,000/-
2. பொறி. K. விஜயமூர்த்தி, உதவிசெயற்பொறியாளர் - 5,000/-
3. பொறி. K. சதாசிவம், உதவிசெயற்பொறியாளர் - 5,000/-
4. பொறி. S. தனசேகரன், உதவிசெயற்பொறியாளர் - 5,000/-
5. பொறி. K. மனோகரன், உதவிசெயற்பொறியாளர் - 4,000/-

**பணி ஓய்வு பெற்றவர்கள்**

(அரசாணை (வாலாயம்) எண். 25 நீர்வளத் (டி2) துறை நாள் 31.01.2023)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | P. தேவராஜன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 2. | R. ஜமுனாதேவி | கண்காணிப்புப் பொறியாளர் |
| 3. | G. அசோக்குமார் | தலைமை வரைதொழில் அலுவலர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

# இரங்கல்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலத்தலைவர் பொறியாளர் S.பாஸ்கரன், உதவிசெயற் பொறியாளர் அவர்களின் தாயார் திருமதி. S.கனகவல்லி (வயது 82) அவர்கள் 09.01.2023 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் காஞ்சிபுரம் கிளையின் முன்னாள் உறுப்பினர் பொறியாளர் P.திருநாவுக்கரசு, உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் 25.01.2023 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் கிழக்கு மண்டல செயலாளர் பொறியாளர் K.சேகரன், இளநிலைப்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் 27.01.2023 அன்று இயற்கை எய்தினார்.

# உறுப்பினர்களின் கவனத்திற்கு

புனரமைக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம் உறுப்பினர்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே சென்னைக்கு வரும் உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் புனரமைக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லத்தை பயன்படுத்திக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# உறுப்பினர்களின் கவனத்திற்கு

சென்னை பொறியியல் இல்லத்தில் மாத வாடகையில் (Monthly Rent) தங்குவதற்கு மாத வாடகை கட்டணமாக ரூபாய் 5000/- (ஐயாயிரம் மட்டும்) என முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் பயன்படுத்திக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# உபநயன விவாஹ சுபமுகூர்த்த பத்திரிக்கை

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சுபகிருது வருடம் **மாசி மாதம் 07-ஆம்** தேதி **(19.02.2023) ஞாயிற்றுக்கிழமை** சதுர்தசி திதியும், திருவோணம் நட்சத்திரமும், அமிர்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் சூரிய உதயாதி காலை **07.30 மணிக்கு மேல் 09.00 மணிக்குள்** மீன லக்னத்தில் உபநயனமும், ததுபரி காலை **10.30 மணிக்குமேல் 12.00 மணிக்குள்** ரிஷப லக்னத்தில்

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி
தெய்வத்திரு.**K.P. லச்மையசெட்டியார் - L. சகுந்தலா அம்மாள்** அவர்களின் பௌத்திரனும், சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி தெய்வத்திரு. **R.K.N. ராமானுஜம்** செட்டியார் - **R. சூரியகுமாரி** அவர்களின் தௌஹித்திரனும், சேலம் மாவட்டம், ஜாகிர் அம்மாபாளையம், **திரு. K.L.சுப்ரமணி - திருமதி. S. லதா**
இவர்களின் ஜேஷ்ட குமாரன்

**S.பிரகதீஷ் M.Tech., (Environmental Specialist)**
**(Duke India Services Private Limited, Coimbatore) என்கிற வைஸ்ய வரனுக்கு**

திருவண்ணாமலை மாவட்டம், கஸ்தம்பாடி தெய்வத்திரு.**K.M.மன்னார் செட்டியார் - M.வேணி அம்மாள்** அவர்களின் பௌத்திரியும், பெரம்பலூர் மாவட்டம், பாதாங்கி தெய்வத்திரு.**N.பாண்டுரங்கன்** செட்டியார் - **P.அம்சவேணி அம்மாள்** அவர்களின் தௌஹித்திரியும், தாராபுரம், திரு.**M. ரவிச்சந்திரன்** செட்டியார் - திருமதி. **R.உமா மகேஸ்வரி** இவர்களின் ஜேஷ்ட குமாரத்தி சௌபாக்கியவதி

**R.கீர்த்தனா B.E., என்கிற வைஸ்ய கன்னிகையை**

சாலங்கிருத கன்னிகாதானம் செய்து கொடுப்பதாய் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு சுபமுகூர்த்தம் **தாராபுரம், பெரியகடை வீதி ஸ்ரீ வாசவி மஹாலில்** நடைபெற உள்ளதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.

**வரவேற்பு**
**18-02.2023**
**சனிக்கிழமை**
**மாலை 06.00 மணி.**

*தங்கள் அன்புள்ள,*
M.**ரவிச்சந்திரன்**
**Junior Engineer, PWD, Dharapuram**
R.**உமா மகேஷ்வரி,**
தங்கை. **R. சக்தி B.Sc., (Psy)**
**தாராபுரம்.**
**துணைத்தலைவர், ஈரோடு கிளை.**
**தமிழ்நாடு பொறியியல் சங்கம்,**
**சேப்பாக்கம், சென்னை-5.**
செல்: 99427 86584, 93845 11018.

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர் வணக்கம்.

நிகழும் மங்களகரமான சுபகிருது ஆண்டு **மாசி மாதம் 11-ம்** நாள் **(23.02.2023) வியாழக்கிழமை** வளர்பிறை சுக்கிலபட்ச சதுர்த்தி திதி ரேவதி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் விடியற்காலை **04.30 மணிக்கு மேல் 05.45 மணிக்குள்** மகர லக்னத்தில்

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு தெய்வத்திரு.**P.A. ரத்தினவேலு** செட்டியார் - திருமதி.**கிருஷ்ணம்மாள்** மற்றும் சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி தெய்வத்திரு. **K.V.ராஜமாணிக்கம்** செட்டியார் - திருமதி. **மல்லிகா** அகியோரின் பேரனும் திரு.**R.K.சண்முகா** - திருமதி. **R.நந்தா** தம்பதியரின் குமாரனுமான திருவளர்ச்செல்வன்

## Er. R.S.அருண்பிரகாஷ் B.E., M.S.,


**(Geometric Americas, Illinois, USA)** **என்கிற வரனுக்கும்**

தருமபுரி மாவட்டம், மாரண்டஅள்ளி தெய்வத்திரு.**M.V.ரத்தினவேல்** செட்டியார் - திருமதி. **சாந்தா** மற்றும் மாரண்டஅள்ளி தெய்வத்திரு.**M.முனிராஜ்** செட்டியார் - திருமதி. **சரோஜா** ஆகியோரின் பேத்தியும் தெய்வத்திரு.**M.R. அன்பழகன்** - திருமதி. **A.தமிழ்செல்வி** தம்பதியரின் குமார்த்தியுமான திருவளர்ச்செல்வி

## A.ஜனனி, MSc., B.Ed., என்கிற கன்னிகைக்கும்

திருமணம் இறைவனருளால் பெரியோர்களால் நிச்சயித்து மேற்படி சுபமுகூர்த்தம் **தருமபுரி, சேலம் மெயின் ரோடு, மதுராபாய் சுந்தரராஜராவ் கல்யாண மண்டபத்தில்** நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.

**வரவேற்பு**
**22.02.2023**
**புதன் கிழமை**
**மாலை 06.30 மணி.**



*தங்கள் அன்புள்ள,*

Er. R.K.**சண்முகா,** B.E., M.B.A.,
உதவிசெயற்பொறியாளர், PWD,
திருமதி. R.நந்தா **சண்முகா,** B.A., தருமபுரி
மகள். Er.**P.S. அனுஷா** B.E., M.B.A.,
மருமகன் Er.**M. பவன்குமார்** B.E.,
Network Engineer, Reliance Jio India Ltd,
Bangalore.
பேரன் **M.P. அனிருத்சாய்,** பெங்களூர்.
**R. மோகன்குமார், ITI., - A.கவிதா**
Technician, TNSTC, ஓசூர்.
நெ.382-L, பென்னாகரம் ரோடு,
குமாரசாமிப்பேட்டை, தருமபுரி - 636 701.
செல்: 89391 23958 / 94453 34072.

# மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்





















அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்தின் (AIFODE) தென் மண்டல செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாநிலத்தலைவர் பொறியாளர் **எஸ்.பாஸ்கரன்** அவர்களுக்கு பொதுச்செயலாளர் த.முருகேசன் அவர்கள் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.




தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,